முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.08.10.2025

E..A.1/2025 in E.P. 47/2024

ம.சா.2 அனந்தகுமார்

முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். நானும் எனது அம்மா ராதாமணிபாய் சேர்ந்து 7,8 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்தேன். வழக்குச் சொத்து 9.700 செனட்ஸ் கு எனக்கு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதில் 7,8 எதிர் மனுதாரர்கள் மேற்கனைய 1.791 சென்ட் இடத்தை ஆக்கிரிமிப்பு செய்திருந்தார்கள். தற்போது 7,8 எதிர் மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு இடத்திற்கான விலைமதிப்பை நாங்கள் பெற்றுக்கொண்டதால் அவர்களுக்கு எதிரான மனுவில் நாங்கள் சமரசம் செய்து கொண்டோம். அவர்களுக்கு எதிராக மனுவை மேல்நடத்தவில்லை என்று இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளோம். எங்களது முடிவு யாருடைய தூண்டுதலும் இன்றி வற்புறுத்தலும் இன்றி சுயமாக எடுக்கப்பட்ட முடிவாகும்.